The Times Of India
Dated: 18-06-2024

# Experts: No EVM can be hacked into or tampered with

Hemali.Chhapia
@timesgroup.com

**Mumbai:** The Indian EVM machine, M3 (model 3), used in the recent Lok Sabha election in which more than 600 million people cast their vote, are complex machines but ta-mperproof, say engineers and domain experts. Likening an EVM machine to a simple calculator that cannot be hacked, Rajat Moona, director, IIT Gandhinagar and a member of the technical panel responsible for designing EVMs, said present conversation around ways to gain illegal access to the voting machine is political in nature and he would therefore like to steer clear of it, but technically speaking, "no EVM can be hac-ked into or tampered with."



American billionaire Elon Musk who said electronic voting machines — like any device — can be compromised, has once again sparked the debate that, experts say, surfaces every few years though no one is really able to prove that Indian EVMs can be tampered. The machines, said experts, are strictly one-time programmable only, do not interact with other systems and are exclusively meant for voting.

The M3 version used in the recently held polls are a smarter version than their predecessor, with several functions that are automated, including a first-level check, like computers carry out before they boot up. These machines are not connected to the internet nor do they have an RF to respond to Bluetooth; they are not even connected to a power socket. "We are already exploring all the new technology that can be brought in for M4 machines," said a member of expert panel.

## UBT MLC booked for entering counting centre

**Mumbai:** Sena (UBT) MLC Vilas Potnis and his armed police guard were booked Sunday for having entered the Lok Sabha election counting centre for Mumbai North-West seat at Nesco ground, Goregaon East without authorisation on June 4. FIR came days after Mangesh Pandilkar, a relative of Mahayuti MP from Mumbai North-West Ravindra Waikar and representative of independent candidate Lata Shinde, was booked for unauthorised use of a cellphone at counting centre. Some reports had wrongly claimed that the cellphone was used to generate OTPs to access the EVMs there. The returning officer and police clarified that EVMs do not require OTPs. **—Nitasha Natu & Clara Lewis**

The Hindu (Tamil)
Dated: 18.06.2024

# இவிஎம் இயந்திரங்களின் செயல்பாடுகளை தேர்தல் ஆணையம் விவாதிக்க திமுக வழக்கறிஞர் அணி தீர்மானம்

● சென்னை

இந்திய தேர்தல் ஆணையம் இவிஎம் இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து பொதுவெளியில் விவாதிக்க வேண்டும் என்று திமுக வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திமுக வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், அக்கட்சியின் தலைமை அலுவலகமான சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் நேற்று நடைபெற்றது. கட்சியின் சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில், சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு: நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் இண்டியா கூட்டணி வேட்பாளர்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, அவ்வெற்றிக்கு பாடுபட்ட தமிழக முதல்வருக்கும், விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் ஸ்டாலினுக்கும் மனமார்ந்த பாராட்டுதலையும், நன்றியையும் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

மக்களவைத் தேர்தலில் பயன்படுத்தப்பட்ட இவிஎம் (EVM) இயந்திரங்களின் நம்பகத்தன்மை, நாடு முழுவதும் பேசுபொருளாக மாறியிருக்கிறது. அதனால், இந்திய தேர்தல் ஆணையம் இவிஎம் செயல்பாடுகள் குறித்து, பொதுவெளியில் விவாதிக்க வேண்டும். நீட் நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்ய வேண்டும்.

விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கட்சி நிர்வாகிகளுக்கு அனைத்து சட்டஉதவிகளை வழங்கி வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் சிறப்பாக செயல்பட வேண்டும். திமுகவழக்கறிஞர் அணியின் செயல்பாடுகளை மேலும் செம்மைப்படுத்திடவும், இதுவரை நடைபெற்றபணிகள் குறித்து ஆய்வு செய்திடவும், மாவட்ட அமைப்பாளர்களின் கூட்டம் ஜூலை 21–ல் நடத்தப்படும்.

DMK party advocate team decide for ECI to discuss functioning of EVMs.

Daily Thanthi

Dated: 18.06.2024

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின்

# 'வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யுங்கள் அல்லது ஒழித்து விடுங்கள்'

## தேர்தல் கமிஷனுக்கு ராகுல் காந்தி வலியுறுத்தல்

புதுடெல்லி, ஜூன்.18-

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யுங்கள் அல்லது அவற்றை ஒழித்து விடுங்கள் என தேர்தல் கமிஷனை ராகுல்காந்தி கேட்டுக்கொண்டு உள்ளார்.

**எலான் மஸ்க் கருத்து**

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடு செய்ய வாய்ப்பு உள்ளதாக கூறி அவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து போர்க்கொடி தூக்கி வருகின்றன. இது தொடர்பாக சுப்ரீம்கோர்ட்டிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு உள்ளன.

அத்துடன் அமெரிக்க பெரும் தொழில் அதிபரும், எக்ஸ் தளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்கின் சமீபத்திய கருத்து அவர்களது குற்றச்சாட்டை மேலும் வலுப்படுத்தி இருக்கிறது.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் மனிதர்கள் அல்லது செயற்கை நுண்ணறிவு மூலம் மேற்கொள்ளப்படும் சிறிய முறைகேடும் (ஹேக்கிங்) மிகப்பெரிய விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் கூறியிருந்தார்.

**நம்பகத்தன்மை கேள்விக்குறி**

ஆனால் அவரது குற்றச்சாட்டை பா.ஜனதா திட்டவட்டமாக நிராகரித்தது. இந்தியாவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் எந்தவித இணைய இணைப்போ, வைபை இணைப்போ, புளூடூத் இணைப்போ இல்லாதவை என கூறியிருந்தது.

ஆனால் எந்த மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தையும் ஹேக் செய்ய முடியும் என எலான் மஸ்க் மீண்டும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

இதற்கிடையே மும்பை வடமேற்கு நாடாளுமன்ற தொகுதியில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு எந்திரம், அந்த தொகுதியில் வெற்றிபெற்ற சிவசேனா ஷிண்டே பிரிவு எம்.பி.யின் உறவினர் ஒருவரின் செல்போனுடன் இணைக்கப்பட்டு இருந்ததாக செய்திகள் வெளியாகி இருக்கிறது.

இது மேலும் சர்ச்சைகளை உருவாக்கி இருக்கிறது. மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வருகின்றன.

**வெளிப்படைத்தன்மை**

இந்த நிலையில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தொடர்பாக தேர்தல் கமிஷனுக்கு நேற்று வேண்டுகோள் ஒன்றை வைத்து இருக்கிறார்.



இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில், 'ஜனநாயக நிறுவனங்கள் அனைத்தும் கைப்பற்றப்படும்போது, நாட்டு மக்களுக்கு வெளிப்படையான தேர்தல் செயல்முறைகளில் மட்டுமே பாதுகாப்பு உள்ளது. தற்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் ஒரு கருப்புபெட்டியாக இருக்கிறது. எனவே வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் நடைமுறைகளின் வெளிப்படைத்தன்மையை தேர்தல் கமிஷன் உறுதி செய்ய வேண்டும். அல்லது அவற்றை ஒழித்து விட வேண்டும்' என குறிப்பிட்டு உள்ளார்.

முன்னதாக மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் தொடர்பாக எலான் மஸ்க் வெளியிட்ட கருத்தை ராகுல் காந்தி ஆதரித்தது குறிப்பிடத்தக்கது.

**தவறான முடிவுகள்**

இதைப்போல மற்றொரு காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகாய் தனது எக்ஸ் தளத்தில், 'வாக்குப்பதிவு எந்திரங்களில் தவறிழைக்க முடியாது என்ற முடிவுக்கு வருவதற்கு முன், இந்த தேர்தலில் எத்தனை எந்திரங்களில் பல்வேறு வகையான கோளாறு கண்டுபிடிக்கப்பட்டன என்பதை தேர்தல் கமிஷன் வெளியிட வேண்டும்' என அவர் கேட்டுக்கொண்டு உள்ளார்.

தேர்தலில் போட்டியிட்டதால் இந்த எந்திரங்கள் தவறான முடிவுகளைக் காட்டியுள்ளன என்று என்னால் உறுதியாக சொல்லமுடியும் என்று கூறியுள்ள கோகாய், பொது மக்களுக்கு தெரிந்துகொள்ளும் உரிமை இருப்பதால் தேர்தல் கமிஷன் இந்த தகவல்களை வெளியிடும் என நம்புவதாகவும் தெரிவித்து இருக்கிறார்.

Thiru Rahul gandhi urges the ECI to Ensure the transparency of EVM.

Dinamalar

Dated: 18.06.2024

# முதியோருக்கு தபால் ஓட்டு
# தேர்தல் கமிஷன் உத்தரவு

சென்னை, ஜூன் 18–
விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் விரும்பினால், தபால் ஓட்டளிக்க நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல், அடுத்த மாதம் 10ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த தேர்தலில், 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள், வீட்டிலிருந்தபடி ஓட்டளிக்க விரும்பினால், அவர்கள் விருப்பத்தை பரிசீலித்து, அவர்கள் தபால் ஓட்டளிக்க, தேர்தல் நடத்தும் அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தேர்தல் கமிஷன் உத்தரவிட்டுள்ளது.

ECI orders postal vote for senior citizens in the vikravandi constituency.